அ.வ.எண். **38/2024** நாள். **07.07.2026**

வா.சா.2. வின்சென்ட் ஜார்ஜ் த/பெ. முத்து

செல்வி. G.பொற்கொடி, IIம் நிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. புரோநோட்டில் நான் சாட்சியாக கையெழுத்து செய்த போது என்னுடன் யார் சாட்சியாக இருந்தார் என்றால் பிரதிவாதி சேதுராஜ், சாட்சி ராஜு என்பவர் இருந்தார், புரோநோட் எழுதிய நபர் பாண்டியராஜ் ஆகியோர் இருந்தோம். ராஜுவை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் இருவரும் ஒன்றாக கையெழுத்து செய்தோமா அல்லது நான் முதலில் செய்தேனா அல்லது ராஜு முதலில செய்தாரா என்றால் நான் தான் முதலில் செய்தேன், ராஜு அடுத்து கையெழுத்து செய்தார். ராஜு எந்த ஊர் மற்றும் முகவரி தெரியுமா என்றால் தெரியாது. ராஜு இரண்டாவதாக கையெழுத்து செய்யப்போகிறார் என்று வாதி எனக்கு ராஜுவை அறிமுகம் செய்து வைத்தாரா என்றால் இல்லை. வாதி எனக்கு நண்பரா என்றால் எனக்கு நண்பர் இல்லை, பழக்கமானவர். ( சாட்சி தன்னிச்சையாக புரோநோட் எழுதிய நபர் பாண்டியராஜ் இல்லை , பாலசுப்பிரமணியன் என்று கூறுகிறார்). வாதி எனக்கு நெருங்கிய நணபர் என்பதால் போலியான புரோநோட் உருவாக்கம் செய்து போலியான நபர் ராஜு என்ற நபரை போலியாக கையெழுத்து செய்து வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

மறு விசாரணை இல்லை.

ஒம் /- வின்செென்ட் ஜார்ஜ்

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சி விசாரித்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாக்கு மூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளித்து என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

MURUGANANTHI M

Digitally signed by MURUGANANTHI M
Date: 2026.07.08 18:50:03 +0530

சார்பு நீதிபதி,
முசிறி.